சிவமயம்

ed as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ல் ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்[தை] [இ]ணையடி [நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம்—வியஹு பங்குனிமீ உஉ உ (1947 ஏப்பிரல் 4 வெள்ளிக்[கிழ]மை) [இல உ

## ஸ்ரீ சத்தியோசாத சிவாசாரியர்

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

இலங்கையிலும் அச்சுவேலி நீர்வேலி விளைவேலி நயினதீவில் கீரிமலை மாவிட்டபுரம், சுன்னாகம், கந்தரோடை புலோலி வண்ணை முதலிய இடங்களிலுமுள்ள பிராமண குருமாரும் அகோர சிவாசாரிய பத்ததியின்படியே தீட்சை சிவபூசை முதலியன செய்து வருகிறார்கள், வாணி கரணவாய் முதலிய ஊர்களிலுள்ள சைவக் குருமார்கள் வேதாரணியத்திலிருந்து இங்கே வந்திருக்கும் சைவக் குருமார்கள் அகோர சிவாசார்ய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சங்கர பண்டிதர், ஆசிரியர் வேற்பிள்ளை, கைலாசபிள்ளை, வேன் மயில்வாகனச் செட்டியார் முதலியோரும் தீட்சை சிவபூசை பெற்றுக் கொண்டது அகோர சிவாசாரியரின் பத்ததிப்படி மேற்சொல்லப்பட்ட ஆதிசைவர்கள் வாணியாதீனத்தார் முதலியவரிடத்தேயாம். ஏனைச் சைவ வேளாளர் முதலியோரும் மேலே சொல்லப்பட்ட பிராமண குருமாரைப் புரோகிதர்களாகக் கொண்டுள்ளவர். இவர்களிலெவராவது சத்தியோசாத பத்ததிப்படி தீட்சிக்கப் பட்டார்களென்று தாபிக்கமுடியாது.

சத்தியோசாதர்பத்ததிப்படி தீக்ஷை சிவபூசை முதலியவை செய்த குருவும் அப்பத்ததிப்படி அநுட்டிப்பவர்களும் இந்தியாவில் இலங்கையில் எப்பாகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் யாரென்பதை வெளியிடுக. சோழ தேசத்தில் திருப்புகலூர் வைத்தீசுவரன் கோயில் சீகாழி மாயூரம் முதலிய இடங்களுக்குப் போய் ஆசாரியாபிஷேகம் பெற்று வருவது வழக்கம். இவர்களுக்கு அகோர சிவாசாரிய பத்ததிப்படியே தீக்ஷை யபிஷேகம் செய்யப்படுகின்றன. அகோர சிவாசாரிய பத்ததியைத் தவிர்ந்த வேறு பத்ததியும் அப்பத்ததியைக் கொள்ளுங்குருவும் இந்தவூரில் இல்லையென்பதாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் எழுதியிருக்கிறார்கள்,

ஒரு பத்ததிப்படி தீக்ஷை பெற்றவர் அப்பத்ததிப்படி சிவபூசை முதலியவை செய்துகொள்ளாது, பிறிது பத்ததிப்படி செய்து கொள்வதும், ஒரு பத்ததிப்படி தீட்சை பெற்று அப்பத்ததிப்படியே சிவபூசை முதலியன செய்து வந்தவருக்கு அந்தியேட்டி முதலியன பிறிது பத்ததிப்படி செய்வதும் கிரமமன்று.

அகோர சிவாசாரியர் முன்னைத் தவவசத்தால் துருவாச முனிவரை உபாசித்து, அவருக்கு அணுக்கராய் அவர்க்கு வந்த கைங்கரியங்களைச் செய்து வந்தாரென்றும், துருவாச முனீந்திரர் உமாதேவியார்கட்டளைப்படி அகோர சிவாசாரியருக்குத் தீக்ஷை அபிஷேக சம்ஸ்காரங்களைச் செய்து, லோகாசாரியனாய் விளங்கினாரென்றும் அகோர சிவாசாரிய பத்ததியே அநுட்டான வியாபகமான பத்ததி என்பதும், சத்தியோசாத பத்ததி என்று ச. பொ. குருக்கள் காட்டியது பதினெண்பத்ததிகளிற்சேராததென்பதுங் காட்டப்பட்டது.

பச்சாம் பேட்டையிலிருந்த சிவாசாரியர் வேறாயிருக்கலாம் என்றார் நமது குருக்கள்,

பதினெண் சிவாசாரியர்களும்காலத்தால் முந்தியவர்கள். அவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ அகோர சிவாசாரிய சுவாமிகள் ஏறக்குறைய எழுநூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னிருந்தவர், பச்சாம் பேட்டைச் சிவாசாரியர் ஏறக்குறைய இறைக்கு முப்ப தாண்டுகட்கு முன்பிருந்து புதுக் கொள்கையைப் பரப்பியவராவர், அதிற் சந்தேகம் வேண்டியதில்லை.

இலிங்கத் தாபன விதிப் படலத்திலே கிழக்குத் திக்கில் இருக்கு வேதமும்…………கோணங்களில் அந்தந்த மூர்த்திக்குரிய மூல மந்திரங்களைச் செபஞ் செய்யவேண்டுமென்று கூறுகிறது, தமிழ்மறையை யோதும்படி சொல்லவில்லை யென்றார். தமிழ்மறையை யோதுவதினாற் றிருவேறுமென்று உடனேயே ஒப்புக்கொண்டு விட்டார். இவர் ஏற்றுக்கொண்டபச்சாம்பேட்டைச் சிவாசாரியர் 'கிழக்குத் திக்கிலே திராவிட வேதமாகிய தேவாராதிகளை வரித்தல் வேண்டும், இது பிராமணர் முதல் சத் சூத்திரர் வரையில் தீக்ஷை செய்துகொண்டே அத்தியயனஞ் செய்தல் வேண்டும்" என்றனர்: எனவே தமிழ் வேதமோதவேண்டுமென்றும், அதற்குரிய ஸ்தான மிதுவென்றும், அதர்குரியாரிவரென்றும் அவராலும் வற்புறுத்தப்பட்டது. சாம்பேட்டைச் சிவாசாரியரை ஏற்றுக்கொள்ளும் ச.பொ. குருக்கள் தமிழ்மறை யோதவேண்டுமென்று அவர் கூறியதையு மொப்புக் கொள்ளவேவேண்டுமே,

இச்சிவாசாரியர் செய்தநூல்களுள் சிவப் பிரதிஷ்டாகாரிகை முதலியவற்றை ஆபாச பூரிதம், சாஸ்திர விரோதம், அநுஷ்டான விருத்தம் என்று ஒருவருங் கண்டிக்கவில்லை என்றும், அவரும் பதி வாக்கியத்துக்கு [மூலாகமத்துக்கு] ஒன்றும் மாறாகச் செய்யவில்லை; ஒன்றும்மாறாகச்சிருட்டிக்கவில்லை' அவர் செய்த பத்ததியைக் கொண்டு கிரியைகள் செய்யலாமென்பதே நம்முட்கிடையென்றும் தமது கருத்தை ச. பொ. குருக்கள் வெளியிட்டுள்ளார்கள்.

சத்தியோசாத சிவாசாரியர் சாத்திரங்களுக்கு மாறான புதிய கொள்கைகளைத் தாபிக்கவும், புதச் சுலோகங்கள் எழுதவும் பின்வாங்கமாட்டார். நவராத்திரி கந்தசட்டி விரதங்கள் சாந்திரமானப்படி நடத்துவதே சாத்திர விதியும் விதியோடொத்த வழக்கமுமாம். இவற்றைச் சௌரமானப்படி நடத்த வேண்டுமென்று புதுக் கொள்கையை உண்டாக்க வந்தவர்களுள் இவரே மூலபுருடராவர். இவர் பிங்கள வருஷத்தில் (1917-ம் ஆண்டு) நவராத்திரி நிர்ணயம் முதலிய பத்திரிகைகளை வெளிப்படுத்தினார். புதுச் சுலோகங்களைச் சிருட்டித்துப் பெருங் கிளர்ச்சியு முண்டு பண்ணினார், இவருக்குப் பிந்தியே

தொடர்ச்சி 6 ம் பக்கம்

## இலங்கை-இந்திய உறவு

### சமரசமாகத் தீர்க்கப்படுமாம்

டெல்கியில் நிகழும் ஆசிய மக்கள் உறவு மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் கோஷடித் தலைவராகிய மிஸ்ரர் பண்டாரநாயக்கா, பல இந்தியத் தலைவர்களைக் கண்டு, இலங்கை-இந்திய உறவு சம்பந்தமாகச் சம்பாஷித்தார் என்று தெரிகிறது. "அசோசியேற்றட் பிறஸ்" செய்தி ஸ்தாபன நிருபருக்கு அவர் அளித்த பேட்டியில் தாம் பண்டிதர் ஜவஹர்லாலுடன் இலங்கை-இந்திய தொடர்பு பற்றிச் சம்பாஷித்ததாகவும், பண்டிதர்நேரு இலங்கை விஷயத்தில் மிகவும் அநுதாபமுடையவராக இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

"இலங்கை-இந்தியா என்னும் இரு நாடுகளுக்கு மிடையே இப்போது சில விஷயங்களையிட்டு அபிப்பிராய பேதம் இருக்கிறதுதான். ஆனால் அந்த அபிப்பிராயபேதம் கூடிய சீக்கிரத்தில் மிகவும் சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்புகிறேன்.

"இலங்கை-இந்தியப் பிரச்சினையை, இப்போதுள்ள அரசாங்கசபை தீர்க்க லாயக்கற்றது என்பதே எனது எண்ணம். இந்த அரசாங்க சபை இன்னும் சில தினங்களிற் கலைக்கப்படவிருக்கிறது. புதிய பாராளுமன்றம் கூட்டப்பட்டதும் இவ்விஷயம் பிரதானமாகக் கவனிக்கப்படும்.

"இன்னும் சிலமாதகாலத்தில் இந்தியாவில் ஓர் பூரண சுதந்திர அரசாங்கம் நிலவும், அந்த அரசாங்கமும் இலங்கையும் இப்போதுள்ள இலங்கை-இந்தியப் பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்துவைக்கும் என்றே நம்புகிறேன்."

"ஆசியமக்கள் மகாநாட்டிற் பங்கு பற்றியதால், இலங்கை அதிக நன்மையடைந்துள்ளது" என்றும் மிஸ்ரர் பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

சென்றவாரம் மிஸ்ரர் பண்டாரநாயக்கா காங்கிரஸ்தலைவர் ஆச்சார்ய கிருபாலினி, பாபு ராஜேந்திரப் பிரசாத் என்பவர்களைச் சந்தித்துச் சம்பாஷித்தார்.

## மழையினுற் சேதம்

### நகரசபையின் தீர்மானம்

சென்ற மாசிமாதத்தில், யாழ்ப்பாணப் பகுதியில், வரும் காத்திராப் பிரகாரம் அதிகமழை பெய்து, யாழ்ப்பாணக் கமக்காரருக்கு அதிக நட்டத்தை விளைவித்திருக்கிறது. இந்த நிலைமையில் யாழ்ப்பாணக் கமக்காரரிடம் இருந்து, உள்நாட்டு நெல்வாங்கும் திட்டப்படி நெல் அறவிடக் கூடாதென்று விவசாயமந்திரி வடமாகாணத் தலைவர்க்கு அறிவிக்க வேண்டும்" என்னும் ஓர் தீர்மானத்தைச் சென்றவாரம் நிகழ்ந்த யாழ்ப்பாணம் நகரசபைக் கூட்டத்தில் ஸ்ரீ R. C. மன்மதராயன் பிரேரித்தார், ஸ்ரீ கே. வி. சின்னத்துரை அநுவதிக்க அது நிறைவேறியது.

யாழ்ப்பாணம் நகரசபைக்கு ஓர் உதவிப் பொக்கிஷதார் வேண்டுமென்றும், அதற்குத் தகுதியான ஒருவரைத் தகுந்த வேதனம் கொடுத்து நியமிக்கும்படி ஸ்தலஸ்தாபனச் சபையைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## நகைச்சுவை

[வித்துவான். பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A.(Hons) B.O.L.]

சுவைகளுள் மிகச் சிறந்ததும் யாவராலும் விரும்பப்படுவதும் நகைச்சுவையே. மக்களின் மனத்தை இழுத்து இலகுவில் மகிழ்ச்சியை யளிக்கும் ஆற்றல் நகைச்சுவைக்குரியதொரு தனிப்பண்பு. நகைமுகத்தையுடைய மனிதரைக் கண்டு களிப்பதுபோல் நகைச்சுவை பெருக்கும் உரைகளைக் கேட்டும் வாசித்தும் மக்கள் இன்பம் அடைகிறார்கள். வாழ்க்கையிலேற்படும் பல துன்பங்களையும் கஷ்டங்களையும் தாங்கிக்கொள்வதற்கு மாத்திரமன்றி வாழ்க்கையில் இன்பத்தைக் காண்பதற்கும் நகைச்சுவையே காரணமாயிருக்கிறது. இதனால் நகைச்சுவையை எங்கெங்கு எவ்வாறு பெறலாமோ அங்கெல்லாம் அதனைப் பெறுவதற்கு மக்கள் முயல்கின்றனர். சம்பாஷணை, சொற்பொழிவு, கதை, நூல், நாடகம் முதலியவற்றில் நகைச்சுவை தவழாவிடின் இவற்றை ஒருவரும் விரும்புவதில்லை. சுருங்கச் சொல்லின் நகைச்சுவை மக்கள் வாழ்க்கையோடு-உயிரோடு கலந்துவிட்டது. நகையில்லையேல் வாழ்வில்லை-உயிரில்லை-எனும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

முற்காலத்தில் மன்னர்களும் நகைச்சுவையை நன்கறிந்து அனுபவித்தனர். கதைகளைச் சொல்லியும் பல செயல்களைச் செய்தும் தம்மை நகுவிக்கத்தக்க பலரைத் தம் அரண்மனைகளில் வைத்திருந்தனர். இவர்களை அக்காலத்தில் 'நகைவேழம்பர்' என வழங்கினர். வடமொழியில் விதூஷகர் எனப்படுவோரும் இவர்களே. சேரன் செங்குட்டுவன் என்னும் அரசனுக்கு ஆரியமன்னர் நகைவேழம்பர் நூற்றுவரைத் திறைப்பொருளாக நல்கினர் எனும் செய்தி சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுளது. நகைவேழம்பர் மாத்திரமன்றி விடர், தூர்த்தர் முதலியோரும் நகையை விளைவிக்கும் ஆற்றலுள்ளவர்களாயிருந்தனர். நாடகங்களில் நகையை விளைப்பதற்காகவே இடையிடையே விதூஷகர்கள் தோற்றுகின்றனர்.

(தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வா[illegible]வ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்[illegible] மாங்குக
ஆழ்க தீயதெல் லாம்அ[illegible]
சூழ்க வையக முந்துபர் [illegible]வ.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய௵
பங்குனிமீ ௨௨உ வெள்ளிக்கிழமை


## மகோற்சவங்கள்

இந்த யாழ்ப்பாணப் பெரும் பிரிவிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலு முள்ள சைவ ஆலயங்களிற் கொடியேறித் திருவிழா நடக்குங் காலமாகிய மகோற்சவ காலம், பெரும்பான்மையும் இப்பங்குனி மாசந் தொடக்கம் அடுத்துவரும் புரட்டாசி மாசம் வரையிலாகு மென்பது சைவமக்கள் பலரறிந்த விஷயம்; இப்படியான மகோற்சவ காலத்திலே இந்நாட்டிலுள்ள சிற்சில ஆலயங்களிலே தவிர, ஏனைய பல ஆலயங்களிலே, அகால உற்சவம் தாசியர் நடனம், வியர்த்தனமான வேடிக்கைகள், சாத்திர விரோதமும் அநுசிதமுமான அலங்காரங்கள், உண்டாட்டு களியாட்டு முதலிய அநர்த்தங்கள் நடப்பதையும், இவைகள் நடக்கவொட்டாது தடுக்கப்படல் வேண்டுமென இப்பத்திரிகை வருடந்தோறும் இந்த நேரத்தில் ஒலமிடுதலையும் அபிமானிகள் பலர் அறிந்திருப்பர். ஆனாலும் இப்பத்திரிகையிட்ட ஓலம் வீண் போகவில்லை; மெல்லெனப் பாயுந்தண்ணீர் கல்லையும் உருகப்பாயும் என்பது பழமொழி.


இப்பத்திரிகை பயபத்தியோடும் மேலான நோக்கத்தோடும் இதமாக இட்டமுறையீடு, கோயிலதிகாரிகள் உற்சவாசாரியர்கள், உபயஞ்செய்வோர், ஆலய உற்சவ தரிசனஞ் செய்வோர் முதலிய அன்பர்களுடைய கட்புலன் வாயிலாகவும் செவிப்புலன்வாயிலாகவும் உட்சென்று அவரவருள்ளத்தில் நன்மைக்கான புத்துணர்ச்சியை ஆக்கி விட்டது போலும். சென்ற ஆண்டிலேயே மகோற்சவ காலங்களில் தாசியர் தருவிக்கப்படாதொழிந்தனர்; பகலிலே நடக்க வேண்டியஉற்சவம்பகலிலும் இரவிலே நடக்கவேண்டிய உற்சவம் இரவிலும் சில ஆலயங்களிற் கிரமமாக நடந்தன; போலிக் கால்கரங்களை மூர்த்திகட்குச் சேர்த்துச் சாத்தி விபரீதமாக அலங்காரஞ் செய்தலாகிய கருமம் சில கோயில்களில் அறவே தவிர்க்கப்படலாயின; திருவிழா முடிவிலே ஆடு கோழி பலியிடுதலாகிய உயிர்வதை செய்யப்பட்ட சில சிறிய நாட்டுப் புறத்துள்ள கோவில்களில், அப்பலியிடுதலாகிய காருண்யமற்ற பாவச் செயலும் தவிர்க்கப்படலாயதெனஅறிந்து மகிழ்ச்சியுறுகின்றேம்; இவைமாத்திர மல்லாமற் சில கிராமங்களிலே யுள்ள இளைஞர் பலர் சைவ இளைஞர் சங்கங்களைத் தாபித்து, மேலே சொல்லப்பட்ட அநர்த்தங்களைவையேனும் தத்தம் கிராமத்திலுள்ள ஆலயங்களிலாக, அயற்கிராமங்களிலுள்ள ஆலயங்களிலாக நடக்கவொட்டாது தடுத்தலாகிய வைராக்கியம் பூண்டு ஆங்காங்குச் சென்று குறித்த பாவச் செயல்கள் நடவாமற் றடுப்பதையும் நாமறிந்து அவர்கள் செயலைப் பாராட்டுகின்றேம்; அவர்களே உண்மையான சைவ இளைஞராவர்; அவர்களுக்கு ஆண்டவனுடைய பூரண அநுக்கிரகம் கிடைக்குமென்பது நிசம்

இப்படியான நன்மைக்குரிய பல சீர்திருத்தங்கள் சிற்சிலஆலயங்கள் விஷயமாக நடைபெறுகின்றவென்பது நிசமெனினும், பழைய மூடக் கொள்கைகளையும் சாத்திர விரோதமான செயல்களையும் வீண் இடாம்பீகத்திற்காகிய கருமங்களையும் உற்சவ காலத்திலே கைவிடாமல், குரங்குப் பிடிபோற் பிடிவாதஞ் செய்துநிற்கும் கோயிலதிகாரிகளும் உபயஞ் செய்வோரும், கோயில் கும்பிடத் திருவிழாப் பார்க்க என்று போகும் பாமர சனங்களும் ஒழிந்தாரல்லர்; இப்படிப்பட்டார் பலரோ சிலரோ என்பது இந்த ஆண்டில் இங்குள்ள ஆலயங்களிலே திருவிழாக்கள் நடக்கும்போதுதான் அறியத்தகும்.

இவை இங்ஙனமாக, தாசிகளைத் திருவிழாக் காலங்களிற் கோயில்களிலே கூப்பிட்டுக் கூத்தாட்டுவதற்குக் காரணம், தாசியர்களில்லாவிட்டால் திருவிழாவிற்குச் சனக் கூட்டம் வராதென்கின்றனர்; இது தக்க காரணமல்ல; தாசியரையும் அவர்கள் செய்யும் நாட்டியத்தையும் பார்ப்பதற்காக வருஞ் சனங்கள் கோயிலுக்கு வராமல் விடுவதனாற் பெரும் நன்மையுண்டு; அல்லாமலும்சனங்களைத் திருவிழாக் காலத்தில் வருவித்தற்கு இப்பொழுது சிறந்த உபாய மொன்றை வல்வைச் சிவன்கோவில் அதிகாரிகளும் திருவிழா உபயஞ் செய்வோரும் அங்குள்ள அபிமானிகளும் கண்டுகொண்டார்கள்; திரு. கிருபானந்தவாரி யென்னும் அன்பரை, மேற்படி ஆலய அதிகாரிகள் உபயஞ்செய்வோர் முதலானோர் அந்த மகோற்சவ காலத்தில் தம் கோயிலில் அழைத்து அப்பெரியோர் வாயிலாக நாள்தோறும் சிறந்த பிரசங்கஞ் செய்விப்பதனால் யாழ்ப்பாணத்தின் பலவூர்களிலு மிருந்து பல்லாயிரக் கணக்கானோர் பிரசங்கங் கேட்க அங்கே செல்வதை எல்லாரும் அறிவரல்லவா? இதனை ஏனைய ஆலயங்களிலும் மகோற்சவ காலங்களிற் பின்பற்றி நடத்தல் நன்மையாம்.

### 1040 ரூபா, களவு

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த சாமுயல் பெண் இராசமணி என்னும் பெண்ணால், தன் வீட்டிற் சென்ற ஞாயிற்றுக்கிழமை யாரோ திருடர் புகுந்து 1040 ரூபா பெறுமதியான ஆபரணங்களையும் துணிகளையும் களவாண்டனர் என்று யாழ்ப்பாணப் பொலிசார்க்கு முறைப்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது.





தென்கன்னடம், ஆனந்தாச்சிரமம்

## சுவாமி ஸ்ரீ இராமதாசர் திருநாள்

[இறைவனின் திவ்விய நாம ஜெபமே இக்கலியுகத்தில் ஆத்மீகவாழ்வுக்கு மிகவும் சுலபமான சாதனையெனத் தமது சொந்த அனுபவங் கொண்டு உபதேசித்து, உலகின் நாலாபக்கங்களிலு மிருந்து தம்மை நாடிவரும் ஆத்மப் பசியாளருக்கு ஆனந்தம் ஊட்டிவரும் சுவாமி இராமதாசர் அவர்களின் 64-வது ஜெனனவிழா ஏப்ரல் 5-ம் 6-ம் தேதிகளில் (அடுத்த சனியும் ஞாயிறும்) இந்தியாவிலும் இலங்கையிலும் பல இடங்களிற் கொண்டாடப்படும்.]

முன்னொருநாள் மன்னவனாஞ் சிவாஜிகோரும்
  முழுவரமு மூவந்தளித்த முத்தனை கண்டாய்
பன்னெடுங்கால் கன்னடஞ்செய் பாக்கியத்தால்
  பர்தனாய் வந்துதித்த *வித்தல் கண்டாய்
அன்னையாங் கிருஷ்ணபாய் ஆர்வந்தீர
  ஆனந்தாச் சிரமமது அழைத்தான் கண்டாய்
தன்னையடை யன்பர்க்குத் தாயாய்ராம
  தாசனெனத் தனையழைக்குந் தந்தைதானே.

தனிமையி லின்பந் துய்க்குந் தன்மையைத் தரணிக்கீந்த
முனிகுரு ராமதாசர் முளரித்தாள் முடிமேற் சூடி
இனிமையி லினிமையான இராமனின் நாமம் பாடிக்
கனிந்திடும் பக்தியாலே கதிபெற வாரீர்! வாரீர்!!

க. இராமச்சந்திரன்

* வித்தல்— (1) பண்டரிப்பூர் தெய்வப்பெயர். (2) சுவாமிஜியின் பூர்வாசிரம நாமமும் அதே.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—11)

**"சார்கிய நாயனார்போல் ஒழுக நேரிட்டது"**

"சாமி, அந்தப்பள்ளிக்கூடத்திலேயுள்ள தலைமை உபாத்தியாயர், மற்றை ஆண் உபாத்தியாயர்கள், பெண் உபாத்தியாயர்கள், பள்ளிக்கூட அதிபராகிய பாதிரியார் எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருந்தாலும் என் பிள்ளைமேல் மிகவும் அன்பு பாராட்டியே ஊடாடினார்கள்; என் மகளும் தான் அவர்களோடு விசுவாசமாக நடப்பதாகவும், சமய வித்தியாசத்தைப் பற்றித் தனக்கும் அவர்களுக்கும் எவ்வகையான பிணக்கு மில்லையென்றுஞ் சொன்னாள்; நானும் அதை யிட்டுச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன்; ஆனால், சாமி, இந்த ஒற்றுமை நீடித்த காலம் நிற்கவில்லை; அங்குள்ள பாதிரியாரும் உபாத்தியாயர்களும மெல்ல மெல்ல, எங்கள் மார்க்கததை நிந்திக்கவும் தங்கள் மதத்தைப் பாராட்டிப்பேசவுந் தலைப்பட்டனர்; நீறு பூசுதல் கிரியைகள் செய்தல் முதலிய இவைகளெல்லாம் மூடத்தனமான செயல்களென்றார்களாம்; என்பிள்ளை அவைகளையெல்லாங் கேட்டுங் கேளாதவள்போலிருந்தாள்; அவர்கள் அவ்வளவில் நிற்கவில்லை; தங்கள் பள்ளிக்கூடத்தில் எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருப்ப எங்கள் பிள்ளைமாத்திரம் மறுமதத்துப் பிள்ளையாயிருத்தல் நல்லாயில்லையென்றும் அங்குள்ள உபாத்தியாயர்கள் பேசத் தலைப்பட்டார்கள்; இவைகளைக் கேட்டு அலுத்து எங்கள் மகள் ஒருநாள் வந்து அங்கு தனக்கு நடக்குங் குறைகளையெல்லாம் எனக்கு முறையிட்டுக் கவலைப்பட்டாள்; அடுத்தநாள் என் மகள் பள்ளிக்கூடத்திற்குப்போகும்போது அப்பள்ளிக்கூடத்துத் தலைமைஉபாத்தியாயரைத்தயவுசெய்து பின்னேரம் வரும்படி சொல்லென்று நான் மகளிடஞ் சொல்லிவிட்டேன்; அப்படியே அந்த உபாத்தியாயர் அன்றுபின்னேரம் எங்கள் வீட்டிற்குவந்து என்னைக் கண்டார்; நான் மகள் சொன்ன குறைகளை யெல்லாம் அவருக்கு எடுத்து முறையிட்டேன்; தலைமையுபாத்தியாயர் நான் சொன்னவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுச் சிறிதுநேரம் யோசித்துவிட்டுக் கவலையுடன் என்னைப் பார்த்து, "ஆச்சி, நான் அந்தப்பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயரென்பது நிசந்தான்: ஆனால் உங்கள் மகளோடு பாதிரியாராக, மற்றை உபாத்தியாயர்களாகச் சமயவிஷயமாகப் பேசியதை இன்று நீங்கள் சொல்ல அறிகிறேனேயொழிய, இதற்கு முந்தி நான் ஒன்றும் அறியேன; அறிந்திருப்பேனேயாயின் நான் அவர்களைச் சமய விஷயமாக உங்கள் மகளோடு ஏதும் பேசவொட்டாது தடுத்திருப்

தொடர்ச்சி 5-ம பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதம் மாற்றம்!

## ஹிந்துக்கள் என்ன செய்கிறார்கள்?

.... ஸ்ரீதரன் ...

சேலம் ஜில்லாவிலேயுள்ள கிராமவாசிகள் அனைவரும் கத்தோலிக்கராகி விட்டனர்; ஆகின்றனர்; ஆகப்போகின்றனர் என்று கத்தோலிக்கர் மதகுரவான பாப்பாண்டவரின் வத்திக்கான் ரேடியோ கூறுகிறது. இச்செய்தி எவ்வளவுதூரம் உண்மை என்பது இப்போது தெரியவில்லை. இது அனைத்தும் உண்மையாக இருக்குமானால், ஹிந்து சமுதாயத்தின் நிலைமை, அதன் எதிர்காலம் ஆபத்து நிறைந்தது என்றே கூறுவோம். சேலம் ஜில்லாவில் மாத்திரம்தான் இந்த மதமாற்றவேலை நடக்கிறது இல்லை. ஹிந்துக்கள் வசிக்கும் இடங்களில் அந்நியமதத்தினர் இந்த விதமாக மதம்மாற்று வேலையில் மிகவும் ஜரூராக ஈடுபட்டுக்கொண்டே வருகிறார்கள். இதன்பொருட்டு அவர்களை நாம் ஒருபோதும் குறைகூற முடியாது. நேர்மாறாக அவர்களுடைய முயற்சியை, ஆர்வத்தை நாம் பாராட்டவேண்டும். அவர்கள் தங்களுக்கு மேலிடத்தில் இருந்து எது கற்பிக்கப்பட்டதோ அதனை உத்வேகமாகச் செய்து வருகிறார்கள். இந்த கேவல நிலைமைக்குப் பொறுப்பாளி ஹிந்துசமூகம்தான்.

ஹிந்துசமூகத்தில் உள்ளவர்கள், அவர்களிலும் தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் அந்நியமதங்களிற் சேருவது கண்கூடு. இப்படி அவர்கள் மதம்மாறக் காரணம் என்ன? ஹிந்துமதம் நூதனமானது என்ற காரணத்தினாலா? அல்லது ஹிந்துமதத்திலும் பார்க்க மற்றைய மதங்கள் சிறந்தன என்ற காரணத்தினாலா? எல்லாச் சமயங்களும் ஒரே ஆண்டவனையே ஒரே இறைவனையே வற்புறுத்துகின்றன. எனவே உயர்வு தாழ்வுபற்றி இந்த ஏழைகள் மதம் மாறவில்லை. வேறு காரணம் இதற்கு உண்டு. இந்தக் காரணம்தான் என்ன?

எங்கள் ஹிந்துஸ்தானத்தில் இன்று மூலைக்கு மூலை, முடுக்குக்கு முடுக்கு சைவ ஸ்தாபனங்களும், சங்கங்களும், சபைகளும், நிலையங்களும் இருக்கின்றன. இவை என்ன செய்கின்றன? ஹிந்துசமுதாயத்தை நல்நிலைமைக்குக் கொண்டுவருவதே இச்சங்கஞ் சபைகளின் நோக்கம்; இந்நோக்கத்தைப் பூர்த்தியாக்கும்வகையில், இவை எவ்வளவுதூரம் சித்தியடைந்துவிட்டன! ஹிந்துமக்கள் இப்படியே மதம் மாறிக்கொண்டுபோனால், ஹிந்துசமுதாயம் எப்படிப் பலம்கொள்ள முடியும்? கிராமங்களில் வதியும் ஏழைமக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறுவதன் காரணம் என்ன? என்பதை ஹிந்துஸ்தாபனங்கள் ஆராயவேண்டும். ஆராய்ந்து அவர்களின் சமூக பொருளாதாரக் குறைகளை நிவிர்த்தியாக்குதல் வேண்டும்: அந்நிய மதத்தினர் எவ்வாறு தம் சமூகத்தைப் பலப்படுத்துகின்றனர் என்பதை நாமும் ஆராய்ந்து, தேவையெனக்காணில், அவர்கள் அநுசரிக்கும் அதே முறைகளை நாமும் கையாண்டு எம் சமூகத்தை நாம் பலப்படுத்தவேண்டும். இங்கே ஒரு மகாநாடு, அங்கே யொரு காங்கிரஸ், கூட்டி பயன்தாராத் தீர்மானங்களை நிறைவேற்றுவதால் மாத்திரம் ஒருபோதும் பயன் கிடைக்காது. இந்த 20ம் நூற்றாண்டில் வாய்ப்பேச்சுக்கு இடமேயில்லை கருமம் தான் வேண்டும். எங்கள் ஹிந்துமகா சபைகள் இனியாவது கருமத்தில் ஈடுபடுமா?

---

கடிதங்கள்

# கீழ்த்தரமானவையா?

ஐயா,

சென்ற 1946-ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்ற ஆங்கில எஸ.எஸ.ஸி. பரீட்சைமுடிபுவெளியாகிவிட்டது. ஆனால் எட்டு மாதங்கட்கு முன் நடைபெற்ற தேசீய பாஷைகளான சிங்கள, தமிழ்எஸ் எஸ் ஸி பரீட்சையின்முடிபைக்காணோம். தேசீயபாஷைகள் மதிப்பற்ற சரக்குகளா?

கனம் கல்வி மந்திரி அவர்கள் தேசீய பாஷைகட்கு முக்கியத்துவம் கொடுப்பதாகப் பகிரங்கமாக அறைகூவுகின்றார். ஆனால், அவரது நிர்வாகத்திற் குட்பட்ட கல்விப்பகுதி அவரது அறைகூவலுக்கு எதிராக நடந்துகொள்வதைக் காண்கிறோம். தேசீய பாஷைகட்கு முக்கியத்துவமென்றால், அப்பாஷைகளின்பரீட்சை முடிபுகள், காலந்தாழ்த்தி வெளிவருவது தான் அர்த்தம்போலும்.

ஆங்கிலஎஸ்எஸ்ஸீ பரீட்சையின் முடிவுக்குஇவ்வளவுகாலதாமதம்(அதாவது எட்டு மாதத்திற்கு மேல்) செல்லுமாயின் இற்றைவரையில் எத்தனையோ கூக்குரல்கள் கனம் கல்வி மந்திரி அவர்களினதும் அவரது கல்வி இலாகா நிர்வாகிகளதும்காதில் எட்டியிருக்கும். ஆனால் தேசீய பாஷைகட்கு ஏற்பட்ட அசம்பாவித நிலைமையைப்பற்றிய கூக்குரல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினது காதிற்கு எட்டவில்லையா?

ஆங்கிலப் பரீட்சைகளின் முடிபுகளைப் பத்திரிகையில் வெளியிடுவதுபோன்று, தேசீய பாஷைப் பரீட்சைகளின் முடிபையும் பத்திரிகைகள் மூலம் வெளியிடவேண்டும்; சென்ற (நான்கு) வருடங்களாகத் தமிழ் எஸ் எஸ் ஸி பரீட்சையின் முடிபுபத்திரிகைகளில் வெளிவரவில்லை. இவ்விஷயத்தையும் அதிகாரிகள் கவனிப்பார்களா?

இலங்கையில் ஜனநாயக அரசாங்கம் நடப்பதும், கனம் கல்வி மந்திரி அவர்கள் பொதுமக்களின் ஊழியன் என்பதும் உண்மையானால் தேசீய பாஷைப் பரீட்சைகள்பற்றிய முடிபு மிகச் சீக்கிரம் வெளியாகுமென எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்
சோ. க. தம்பிப்பிள்ளை
தருகாக்கல். 31-3.47

○

## நெசவாளர்களின் ஆபத்தான நிலை

ஐயா!

இற்றைக்கு ஆறுமாத காலமாக நெசவாளர்கள் நூல் இல்லாமல் பெரும் கஷ்டப்படுகிறார்கள். நெசவுத் தொழிலையே சீவியத்துக்குரிய முயற்சியாகக் கொண்ட அதிக ஏழைகளும் உண்டு. வருங்காலத்தில் மில் துணிகள் வந்து நெசவாளர்களைப் பாதிக்கப்போகின்றன. இதற்காகவும் இன்னும் நெசவாளர்களது பாதுகாப்பைஉம் உத்தேசித்து 'வட இலங்கை நெசவாளர் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது.

சென்ற புரட்டாதி மாதத்துக்குப்பிறகு தற்போதுதான் அரசாங்கம் நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கிறது. நூலுக்குரிய அநுமதிச் சீட்டு எல்லாருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. நூலுக்குரிய விலை இந்தவருடம் ஈன இரக்கமில்லாமல் விதிக்கப்பட்டிருக்கிறது; ஒரு நெசவுதறிக்கு உரிய நூலுக்கு சென்றமுறை 137 ரூபா 35 சதம் கொடுத்து நெசவாளர்களால் வாங்கப்பட்டது. தற்போது அதே அளவான நூலுக்கு 258 ரூபா 75 சதம் விதிக்கப்பட்டிருக்கிறது. 121 ரூபா 40 சதம் (88%) கூடியிருக்கிறது, இக் கூடிய பணம் யாரைப் பாதிக்கிறது? ஏழைகளைத்தான் பாதிக்கிறது. பட்டினி கிடக்கும் நெசவாளரும் இதைத் தாங்கமுடியாது.

இலங்கை முழுவதும் ஒரே அளவான நூல்தான் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் நெசவாளர்கள் நூலைப் பெறும் விதத்தில் வித்தியாசமாக பணம் கொடுக்குமாறு துன்புறுத்தப்படுகிறார்கள் மேல்மாகாணத்திலுள்ள நெசவாளர்கள் ஒரு நெசவுதறிக்குரிய நூலை 225 ரூபா 05 சதத்துக்குப் பெறுகிறார்கள், அதே அளவான நூலை அதே காலத்தில் வடமாகாண நெசவாளர்கள் 258 ரூபா 73 சதம் கொடுத்துப் பெறவேண்டியிருக்கிறது. அதாவது ஒரு நெசவுதறிக்கு 33 ரூபா 70 சதம் (15%) கூடக் கொடுக்கவேண்டியிருக்கிறது. 225 ரூபா [illegible]5 சதத்துக்குக் கொழும்பில் இந்நூலைப் [illegible]றலாம். உதாரணமாக 10 நெசவ[illegible]ள ஓர் ஸ்தாபனம் அநியாயமாக [illegible] ரூபாவை யாழ்ப்பாணத்தில் கூட்டிக் கொடுக்காமல் போக்குவரவுச் செலவுக்காக 25 ரூபாவைச்செலவுசெய்து கொழும்பிலிருந்து உரிய நூலைப் பெறலாமல்லவா?

கொழும்பிலிருந்து வட இலங்கை நெசவாளர்களுக்குரிய நூல் யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவாளர் யூனியனுக்கு வருகிறது. யூனியன் கொழும்பு விலையில் இருந்து 15 % லாபம் வைத்து வட இலங்கை நெசவாளர்களுக்குகொடுக்கிறது 145000 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள்ள நூல் யூனியனுக்கு வருகிறது. யூனியன் 15% லாபம் வைத்து 21750 ரூபாவுக்கு மேல் கொள்ளைலாபம் அடைகிறது; இந்த லாபம் 14 நாட்களுக்குள் கிடைக்கிறது. யூனியனில் 5 ஸ்தாபனங்களுண்டு. ஏறக்குறைய 50 நெசவு தறிகள்வரையில் யூனியனுக்கு இருக்கிறது. ஏறக்குறைய 600 நெசவு தறிகளுக்குமேல் யூனியனில் இல்லாதவர்களுக்கு இருக்கிறது. இவர்களுடைய பேரால் வரும் லாபத்தையும் யூனியன் சாப்பிடுகிறது. இக் கொள்ளைலாபம் அடிக்கும் தொழில் ஐக்கிய இயக்கத்துக்கு மாறாகும், ஏழைகளது இரத்தம் பிழிந்த பணத்தை முதலாளிகள் உண்டு ஏப்பம் விடுகிறார்கள்.

இவ்விதமாகவும் வட இலங்கை நெசவாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். விஷயம் தெரிந்த எவர்களும் இதை ஒப்புக்கொள்வார்கள். இவ்விஷயங்களை கைத்தொழிற் பகுதி அதிகாரிகளுக்கு விளங்கப்படுத்தி, இனிமேலாகுதல் நெசவாளர்களுக்கு சலுகைகள் பெறுவதற்காகவும், தற்போதைய நிர்ப்பந்தமான திணிப்பைத் தளர்த்துவதற்காகவும், வழிதேடுவதற்காக வட இலங்கைநெசவாளர்சங்கம்கருமமாற்றுகிறது. நமதுகோரிக்கைகள் நியாயமானவை. தர்மமானவை, கைத்தொழில் அதிகாரிகள் ஒப்புக்கொள்வார்கள் என்றே எண்ணுகிறோம். யூனியனுக்குச் சொந்தமல்லாத நெசவு தறிகளுக்குரிய நூலை வட இலங்கை நெசவாளர் சங்கம்மூலம் விநியோகிக்கவேண்டும்; அல்லது அரசாங்கம் நெசவு சாமான்கள் விற்பனவு செய்வதற்கு ஓர் கிளை ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும், நமது தர்மமான நியாயங்களுக்காக கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
சி. க வேலாயுதபிள்ளை
கொழும்பு, 30-3.47

---

## சமதர்மிகட்கு யாழ்ப்பாணத்தில்காரியாலயம்

இலங்கைச் சமதர்மக்கட்சி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி ரோட்டில் ஓர் கிளைக்காரியாலயத்தைத்திறக்க நிச்சயித்திருக்கிறது. இக்காரியாலயம், கட்சிக்காரியதரிசியான மிஸ்ரர் பீற்றர் கெனமன் என்பவரால் வருகிற ஞாயிற்றுக்கிழமை (6—4—47) திறந்துவைக்கப்படும் என்றும், அத்தருணம் மிஸ்ரர் எம் ஜீ. மெண்டிஸ், ஸ்ரீமான்கள்: கே. இராமநாதன், ஆர். ஆர். பூபாலசிங்கம், எஸ். கே. கந்தையா, ஆ. நா. கந்தசாமி என்பவர்கள் சொற்பொழிவுசெய்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## காரைக்காலம்மையார்குருபூசை

பங்குனிமாதத்துக் குருபூசையாக, காரைக்காலம்மையார் குருபூசை, யாழ்ப்பாணம் ஹிந்துமகாசபையினரால் பங்குனிமீ உடு உ (7—4—47) வண்-கிழக்கு லங்காக் கல்லூரியில் நடத்தப்படும் என்று அறிகிறோம்.

---

## குணசிங்கிக் கட்சி

இலங்கையிலே தொழிற்கட்சி என ஓர் கட்சி மிஸரர் ஏ. ஈ. குணசிங்கி என்பவரின் தலைமையில் உளது. அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் இக் கட்சியின் 20 அபேட்சகர்கள் முன் னிற்பராம். தேர்தல் முடிந்து, பாராளுமன்றம் அமைக்கப்பட்டதும், இக்கட்சி, தகுதியெனக் காணும்[illegible] தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்குமாம்.

---

இந்திய அரசியல்

# மகாத்மா நம்பிக்கை

## பிரிட்டிஷார் நிச்சயம் விலகுவர்

### என்னசெய்வார்?

மகாத்மாகாந்தி இராஜப்பிரதிநிதிவேவலுடன் சம்பாஷணைகள் நிகழ்த்தி வருகிறார். இதுவரை அப்பேச்சுக்கள் முடியவில்லை. இவ்வார இறுதியில் மிஸ்ரர் ஜின்னாவும் இராஜப்பிரதிநிதியைக் காண்பார் இவர்களிருவரையும் விட, ஸ்ரீஜுத் இராஜகோபாலாச்சாரியார், சர்தார் பல்தேவ் சிங், லியாகத் அலிகான், தாழ்த்தப்பட்டவர் சம்மேளனத் தலைவராகிய டக்டர் அம்பெத்கார் என்னும் இவர்களையும் மவுன்ற்பேற்றன்பிரபு கண்டு பேசிவிட்டார். இன்னும் 10 தினங்களில் மாகாணத் தேசாதிபதிகளையும் சம்பாஷணைக்கு வரவழைத்திருக்கிறார். இச் சம்பாஷணைகளில் ஏதும் பயன் கிடைக்குமா? காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஓர் சமரசத்துக்கு வந்து, 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன் ஓர் அரசியலை ஸ்தாபித்துவிடுமா? அப்படியான ஓர் அரசியலை நிர்மாணிக்காத பட்சத்தில் பிரிட்டிஷார் தமது அதிகாரத்தை யாரிடம் ஒப்புவிப்பார்? என்றின்னோரன்ன பிரச்சினைகள் இன்று எழுந்துள்ளன.

***

### அதிக அதிகாரம்

இன்னும் 15 மாத காலத்திற்குள் இந்தியாவை இந்தியர் கைக்கு மாற்றுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதற்கு மவுன்ற்பேற்றன் பிரபுவுக்கு மிகவும் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியான அதிகாரங்கள் முந்திய இராஜப்பிரதிநிதி எவர்க்கும் அளிக்கப்படவில்லை என்று லண்டன் அரசியல்வட்டாரங்களிடையே பேசிக்கொள்ளப்படுகிறது மவுன்ற்பேற்றன் பிரபு காலம் அதிவேகமாகப் போவதை நன்கு அவதானிக்கிறார். எனவே, அவர் துரிதமாகக் கருமம் ஆற்றவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது அரசியல் நிர்மாண சபை குறித்த காலத்துக்குமுன் தன் கருமத்தை முடிக்காவிட்டால், இப்போதுள்ள இடைக்கால அரசாங்கத்தையே பலமுள்ளதாக்கி, வருகிற ஆண்டில் அதிகாரத்தை அந்த அரசாங்கத்துக்கு மாற்ற இராஜப்பிரதிநிதி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யலாம் இப்போதுள்ள இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரஸ் ஓர்பக்கமாகவும் லீக் ஓர்பக்கமாகவும் இழுக்கின்றன. இந்தக் குறைகள் ஏற்படாமல் அதனை ஓர் பூரணமான ஜனநாயக மந்திர சபைபோல அமைப்பதுதான் இராஜப்பிரதிநிதியின் அடுத்த வேலையாயிருக்கும் என்று கூறலாம்.

***

### மகாத்மாவின் நம்பிக்கை

மகாத்மாகாந்திஇராஜப்பிரதிநிதியுடன் நிகழ்த்திவரும் சம்பாஷணைகள் இன்னும் முடியவில்லை, இவ்வாரம் முடியும்வரை சம்பாஷணைகள் நீடிக்கலாம் என்று தெரிகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை புதுடெல்கியில் நிகழ்த்திய பிரார்த்தனைக்கூட்டத்தில் இராஜப்பிரதிநிதியுடன் தாம் நிகழ்த்திவரும் சம்பாஷணைகள்பற்றி காந்தியடிகள் குறிப்பிட்டார். இந்தியாவின் கடைசி இராஜப் பிரதிநிதியாகவே, தாம் வந்தது என்றும், இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்றும் ஒரே ஒரு சிறந்த லட்சியத்துடனேயே தாம் பதவி ஏற்றதென்றும் மவுன்ற்பேற்றன் பிரபு தமக்கு உத்தரவாதம் கூறியதாக மகாத்மா அறிவித்தார். இராஜப்பிரதிநிதியின் வார்த்தையிலோ. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலைமையிலோ, இனியும் அவநம்பிக்கை கொள்ளக் காரணமில்லை என மகாத்மா குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்.

மேலைப்புலோலி சோக்கன் சலட்டி முத்துமாரி அம்மன் கோவில் தருமபரிபாலன சபை

1947-ம் ஆண்டு பங்குனி மாசம் 3 ம் திகதி திங்கட்கிழமை பி[illegible]னேரம் 4 மணியளவில் ஷ கோவில் ம[illegible]ண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது[illegible]

அத்தருணம் பல அவ[illegible]ரோனைகள் சபைமுன் கொ[illegible]ப்பட்டு முறையே நிறைவேறியது.

அன்றியும் ஷ கோவில் உதவி மனேஜர் வேலப்பர் ஆழ்வாப்பிள்ளையை, அவரில் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள்

1 கோவில்சொத்துக்களை அபகரித்தல்
2 கோவில் கணக்குகளைச் சமர்ப்பிக்கத் தவறல்.
3 கோவில் கிரம ஒழுங்குகள் யாவும் தவறல்

ஆகியவைகளில் அவரைக் குற்றவாளியாகக் கண்டும், இன்னும் நிருவாகசபை அங்கத்தவர்களில் ஐவராகிய

1 நாராயணர் சுப்பிரமணியம்,
2 மு. சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
3 முருகர் வேலுப்பிள்ளை
4 தாமு பெரியதம்பி
5 ஆறுமுகம் இராமலிங்கம்

என்பவர்களும் ஷ உதவி மனேஜர் வே. ஆழ்வாப்பிள்ளைக்கு இக்குற்றங்கள் செய்வதற்கு ஒத்தாசையாக இருந்தும் உதவிபுரிந்தும் கூடியும் கோவில் அபிவிருத்திக்குப் பாதகமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளிலும் இவர்கள் ஐவரையும் முறையே குற்றவாளிகளாகக் கண்டும், நொத்தாரிஸ் பாமு சிதம்பரப்பிள்ளை முகதாவில் 1919-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி 15548-ம் இலக்கத்தில் முடிந்த அதிகார நியமனச் சாதனத்தின் பத்தாவது விதானத்தின்படி மேற்படி உதவி மனேஜர் வேலப்பர் ஆழ்வாப்பிள்ளையையும் மேற்படி நிருவாக சபை அங்கத்தவர்களாகிய

1 நாராயணர் சுப்பிரமணியம்
2 மு. சிதம்பரப்பிள்ளை கணபதிப் பிள்ளை
3 முருகர் வேலுப்பிள்ளை
4 தாமு பெரியதம்பி
5 ஆறுமுகம் இராமலிங்கம்

ஆகிய ஐவரையும் அவர் அவர் ஸ்தானங்களிலிருந்து இன்று இங்கு கூடியிருக்கும் மேற்படி கோயில் தர்மபரிபாலன சபையின் பொதுக்கூட்டத்தாராகிய நாங்கள் நீக்குகிறோம் என புலோலி மேற்கு ஸ்ரீமான் வெற்றியர் வல்லிபுரம் பிரேரிக்கவும் ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை தம்பிர சா அனுவதிக்கவும் மேற்படி சபையின் சர்வசம்மதத்துடன் நிறைவேறியது.

சி. சிதம்பரப்பிள்ளை
ஷ சபையின் அக்கிராசனர்

புலோலி மேற்கு 10—3—47.
Mis. 3 — 4, 7. 11-4 47

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டு வழக்கு இலக்கம் 2530 P.

இந்தப் பத்திரிகையில் 21-3-47-ம் திகதியின் பிரசுரத்தில் காட்டப்பட்ட மேற்குறித்த விளம்பரத்தில் பின்னால் காட்டப்படும் 8 எதிரிகள் பராமுகத்தால் காண்பிக்கப்படவில்லை.

9 பருத்தித்துறை கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம்
10 பருத்தித்துறை கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
11 பருத்தித்துறை விஞுசித்தம்பி நாகலிங்கமும்
12 பெண் குணபூஷணியும்
13 பருத்தித்துறை ஆறுமுகம் சோமசுந்தரமும்
14 பெண் அமிர்தவல்லியும்
15 பருத்தித்துறை விசுவலிங்கம் வேலாயுதம் பராயமற்றவர்
16 பருத்தித்துறை வசுவலிங்கம் திலகவதி பராயமற்றவள்

15-ம் 16-ம் எதிரிகள் பராயமற்றவர்கள் அவர்களின் பராபரிப்புக்காறர் 9-ம் எதிரி;

வி. குழந்தைவேலு முதலியார்
கொமிஷனர்

பருத்தித்துறை 15—3—47.
Mis 2 4—4—47

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் ஆனைக்கோட்டை Mr செ. வெற்றிவேலு கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகை விபரம்:

| இல. | திகதி | ரூபா | பெயர் | ஊர் | அடைவுப்பொருள் விபரம் |
|---|---|---|---|---|---|
| 687 | 14-3-1946 | 260 | ஆ. சிவசம்பு | சுதுமலை வடக்கு, | அரைபவுண்கோர்த்தசங்கிலி |

விற்பனவு 1947-ம் ஆண்டு ஏப்பிரல் மாசம் 16-ம் திகதி காலை 10மணிக்கு மேற்படியார் கடையில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரெட்ணம்
Commissioner of Sales.

Van North West
(M 369, 1 & 4-4-47)

## திருச்சி ரேடியோ

சனி ஏப்ரல் 5

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கும்பகோணம் எஸ் சுவாமிநாதய்யர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ஆர் ஷண்முகவல்லியம்மாள் பாட்டு 8-30 காலைஇசை 9 முடிவு

1 கும்பகோணம் எஸ் சுவாமிநாதய்யர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 அனந்தலட்சுமி சடகோபன் இசைத்தட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 5 40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 ஆர் ஷண்முகவல்லி அம்மாள் பாட்டு 7-15 வாணிபப் பயிர்கள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 பாருபள்ளி ராமகிருஷ்ணைய பந்துலு பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-[illegible]5 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஜே துரைசாமி பியானோ 10 இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு ஏப்ரல் 6

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி என் கங்காபாய்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 9 முடிவு.

12 நந்தனார் 12-30 யார் இவர் 1?-40 காப்பி பாரதிதாசன் பாடல் 22.45பெரிய புத்தகம் நாடகம் 12-55 எனக்கு வேண்டாம் 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 140 வயலின் வீணை 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 வானாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 5-30 ஈஸ்ரர் தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 வானாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 5-30 ஈஸ்டர் தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வானாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 7-30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 8-30 டி என் கங்காபாய் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 திருவிழி மிழலை சகோதரர்கள் நாகஸ்வரம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 நாட்டிய சங்கீதம் 10-30 முடிவு.

திங்கள் ஏப்ரல் 7

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஏ ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காரைக்கால் ஏ முகம்மது தாவூத் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 காரைக்கால் ஏ முகம்மது தாவூர் பாட்டு 2-15 கோவைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 ஏ ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 டி எஸ் மரியானந்தம் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7 45 இந்தியாவும் தென்கிழக்கு ஆசியாவும் 8 டி எஸ் மரியானந்தம் பாட்டு 8-30 இசைக்கதம்பம் 8 55 இசைவேளை சங்கீதம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வீணை தனம்மாள் 9-[illegible]0 லண்டனிலிருந்து செய்திகள் 94[illegible] அறிவிப்புகள் 9-45 டி வி சங்கரகோபாலன் புல்லாங்குழல் 10 இசைவேளை 10-30 முடிவு

சேவ்வாய் ஏப்ரல் 8

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 கும்பகோணம் பி வி ராசேசவரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 எஸ் எம் ராமசாமி ஐயர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கும்பகோணம் பி வி ராசேசுவரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கும்பகோணம் பி வி ராசேசுவரி பாட்டு 2-15 கோவைக்கல்வி 2-45 முடிவு,

5 எஸ் எம் ராமசாமி ஐயர் புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-[illegible]0 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 இலக்கிய வாசகம் 7-15 எதிர்பாராத கௌரவம் நாடகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மஹாராசபுரம் விச்வநாத ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வாத்ய கதம்பம் 6 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 945 கே ஜே ஜேஸ் தில்ரூபா 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

## நகைச்சுவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விதூஷகர்களை இக்காலத்தில் நாம் கோமாளிகள் (clowns) என்கிறோம். நகையை விளைக்கத்தக்க செய்யுள்களுக்கு 'விகடகவி' என்று பெயர். இக்கவிகளைப் பாடிய புலவர்களையும் விகடகவி என்று வழங்கினர். விகடகவி என்னும் சொல்லிலேயே ஒரு விகடம் இருக்கின்றது. முதலிலிருந்து வாசித்தாலும் விகடகவி, கடைசியிலிருந்து வாசித்தாலும் விகடகவி, நிற்க.

இலக்கிய நூல்கள் எந்த மொழியில் இயற்றப்பட்டிருப்பினும் அவை பலசுவைகள் நிறைந்தனவாகவே யிருக்கும் இச்சுவைகளுள் நகைச்சுவைதான் தலைமையிடம்பெற்று விளங்கும். சிறந்த இலக்கியம் எனும்பொழுது அது நுட்பமான நகைச்சுவையைக் கொண்ட தென்பது கூறாமலே யமையும்.

தொல்காப்பியர் நகைச்சுவைக்குரிய நிலைக்களன்களை நான்காக வகுத்தனர்.

'எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப'

என்பது அவர் கூற்று.

ஒருவரை இகழும்பொழுது நகை தோன்றுகிறது. பழிப்பது போலப் புகழலாம், புகழ்வதுபோலப் பழிக்கலாம். காளமேகப்புலவர் இச்செயல்களிற் பேர்பெற்றவர்: 'வசைபாடக் காளமேகம்' என்பது முன்னோர் கூற்று. இளங்குழவிகள கூறும் அரைகுறைச் சொற்களை-மழலைவார்த்தைகளைக்கேட்டு யார்தான் நகையாதிருப்பர்! பேதைமை என்பது பிறர் சொல்வதைக்கேட்டு அதனை ஆராய்ந்தறியாது உண்மையென்று அப்படியே நம்பிவிடுவது. மடமை என்பது அறியாமையாகும். நகைச்சுவையைக் கொடுக்கும் செய்திகள் யாவற்றையும் ஆராய்ந்தால் அவற்றின் ஆதாரமான காரணங்கள் இந்த நான்குமேயென்பது நன்கு புலப்படும்.

'கைபோஸ்' எனும் ஆங்கில அறிஞர் முதன்மை, ஆச்சரியம், பொருத்தமின்மை (Superiority; curicsity, incongruity) எனும் மூன்றின் கலப்பாலும் நகை உண்டாகும் என்கிறார். எள்ளலுக்குக் காரணமாயிருப்பது முதன்மையாகையாலும், இளமை பேதைமை மடமைகளில் ஆச்சரியமும் பொருத்தமின்மையும் அடங்குதலாலும் இம்மூன்றும் தொல்காப்பியர் கூறிய நான்கினோடு இசைதல் காண்க.

மக்களாய்ப் பிறந்தவர்களில் இடையிடையாகுதல் நகையாது வாழ்பவர்கள் அறவே இல்லை. வேடிக்கையான நிகழ்ச்சிகளை-இன்பம்பயக்கும் செய்திகளைக்-கண்டும் கேட்டும் நாம் நகைக்கிறோம், ஆனால் துன்பம், கஷ்டம் முதலியன நேரின் நாம் நகைப்பதில்லை: அழுகிறோம். அவலப்படுகிறோம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும் நம்மைச் சிரிக்கும்படி தூண்டுகிறார் ஒரு பெரியார். அவர் யார்? 'பொய்யில் புலவன்' என மணிமேகலையாசிரியராற் புகழப்பட்ட திருவள்ளுவராவர்.

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்"

என்பது அவர் கூற்று.

துன்பம் வரும்பொழுது சிரிப்பதால் துன்பம் தோற்றுது போவதுமாத்திரமன்றி அத்துன்பத்தையும் வெல்லச்செய்வது அச்சிரிப்பே என்கிறார் அவர். அப்பெரும்புலவர் இயற்றிய நூல் திருக்குறளாகும். அது குறள்வெண்பாக்களால் ஆக்கப்பட்டது ஒரு குறள்வெண்பாவில் எழுசீர்களுண்டு; ஏழெட்டுச் சொற்களைத்தான் ஒரு வெண்பாவில் அமைத்துப்பாடலாம். இப்படிப்பட்ட சிறு செய்யுள்களில் நகைச்சுவையை விளக்குஞ் செய்திகளைப் புகுத்திப் பாடுவது அருமையினும் அருமை. எனினும், வள்ளுவர் சில குறள்களில் நகைச்சுவைக்கு இடங்கொடுத்தேயுள்ளார்.

கயவர்களைப்பற்றிக் கூறும்பொழுதுதான் நம்மை அவர் நன்கு சிரிக்கச்செய்கிறார். நல்ல குணங்கள் ஒன்றுமே அமையாதவர்களே கயவர். இப்படிப்பட்டவர்களைத் தேவர்களோடு ஒப்பிட்டால் யாரே நகைக்காதிருப்பர்.

"தேவர் அனையர் கயவர் அவரும் தாம்
மேவன செய்தொழுக லான்"

எப்படியிருக்கிறது பொருத்தன்மை:

"நல்லவற்றை அறிகின்ற மக்களிலும் கயவர் நன்மையுடையவர்கள்" என்பது எவ்வாறு பொருந்தும்! [illegible] ருத்திக் காட்டுவதைப் பாருங்கள்.

"நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்"

பின்வரும் குறளின் சொல்லடுக்கும் பொருட்டெளிவும் படிப்போர்க்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது! பலமுறை படித்துப்பாருங்கள் கயவருடைய வியாபாரத்தையும் அவர்களுடைய சரக்கையும்பற்றிக் கூறுகிறது அது.

"எற்றிற் குரியர் கயவர் ஒன்றுற்றக்கால்
விறறற் குரியர் விரைந்து"

உலகத்திலே கெடுதியை யாவரும் வெறுப்பர். ஒரு கெடுதியும் தமக்கு நேராதிருக்கவேண்டுமென்றுகடவுளையும்வேண்டுவர்; கெடுதி விளைந்தாலும் அதனினின்று விரைவில் விலகிவிட விரும்புவர்; இத்தகைய கெடுதியை வாங்கிக்கொள்ளச் சொன்னால்-அதுவும் உள்ளவற்றை விற்று அப்பொருளைக் கொண்டு வாங்கிக்கொள்ளச்சொன்னால்-இதனைக் கேட்டவுடன் யார்தான் நகையாதிருப்பர்.

"ஒப்புரவினல் வருங் கேடெனின்
அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"

இக்கேட்டை வள்ளுவர் இவ்வளவில் விட்டுவிடவில்லை. அதில் ஓர் 'உறுதி உண்டு' என்றும், அதுதான் நண்பரை 'நீட்டியளக்கும் கோல்' என்றும் எடுத்துக்காட்டுகிறார். அடி அங்குலம் முதலியவற்றிலா, அன்றிச் சாண் முழம் முதலியவற்றிலா, அல்லது 'மீற்றர்' அளவையிலா அளக்கிறது என்று கூடச் சிலர் கேட்கலாம்.

'கேட்டினுமுண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்'

என அவர் அழுத்தமாகக் கூறுவதைப் பாருங்கள்.

பகையைக் கொடுத்தாயினும் கொள்ளவேண்டுமென்றும் இறப்பை இரந்தாயினும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இவர் கூறும்பொழுது நமக்குச் சிரிப்பல்லாமல் வேறு என்ன உண்டாகும்?

'கொடுத்துங் கொளல்வேண்டும் மன்ற
அடுத்திருந்து
மாணுத செய்வான் பகை"

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பிற்
சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து"

[illegible] (தொடரும்)

## நரம்பன் ஸ்ரீமத் மகாதேவசுவாமிகளின் ஞாபக விழா

மேற்படிவிழா 5-4-47 சனிக்கிழமை காலை 9 மணி முதல் 1.30 மணி வரை கரம்பன் மேற்கு சண்முகநாத வித்தியாசாலை மண்டபத்தில் முதலியார் குலசபாநாதன் அவர்கள் தலைமையில் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பேன்' ஆனுற் பாதிரியார் உங்கள் மகளோடு சமய விஷயமாக ஏதும் பேசியிருந்தால், அவருக்குக் கீழிருந்து சேவகஞ் செய்யும நான் அவரை எப்படித் தடுக்கமுடியும்? அல்லாமலும் பாதிரியாரெனிலோ, தம் சமயந்தான் உண்மையானதென்ற நம்பிக்கையுடன் இத்தவூரிலே தஞ்சமயத்தைப் பரப்புங் கடமையோடு வந்தவர்; அவரை நாம் குறை கூறவொண்ணுது; ஆனுல் மற்றை உபாத்தியாயர்கள் இப்படியான விஷயத்திலே தலையிட நியாயமில்லையென்று நினைக்கிறேன்; மேலும், ஆச்சி, நீங்கள் என்னேடு விசுவாசமாகப் பேசுகிறபடியால் நானும் என் உண்மை நிலையை உங்களுக்குச்சொல்லவிரும்புகிறேன்; நான் ஆதியிலே கிறீஸ்தவனல்லேன்; சைவப் பெற்ருர்க்குப் பிள்ளையாகப் பிறந்து சைவனுகவே வளர்ந்து படித்துவந்தேன்; இதற்கிடையில் முதல் என் தகப்பனுர் பின் என் தாயார் இருவரும் மோசம் போய்விட, நான் அநாதனுனேன்; எனக்கு மேல்வகுப்பிற் படிக்கப் பொருளுதவி செய்யக்கூடிய உற்ருர் உறவினருமில்லை; அதனுல் நான் மிஷன் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படித்து உபாத்தியாயர்ப் பரீட்சையிலும் சித்தியடைந்தேன்; பாதிரியார் எனக்கு உபாத்திமை யுத்தியோகந் தருவதானுல் தம் சமயத்திற் பிரவேசிக்கும்படி வற்புறுத்தினுர்; ஆச்சி, வறுமையின் கொடுமையால் அவருடைய கேள்விக்கிணங்கி நான் கிறிஸ்தவனுனேன்; நான் அகத்திலே கிறீஸ்தவனே அல்லனே என்பது என் மனச்சாட்சிக்கும் அந்த ஆண்டவனுக்கும் தெரியும்; விஷயமறிந்த உங்களுக்கு அதிகஞ் சொல்லுவதென்ன; சுருக்கமாகச் சொல்லுகிறேன்; எங்கள் பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட சாக்கிய நாயனுரைப் போலத்தான் நானும் அகத்தொன்று புறத்தொன்ருக ஒழுக வேண்டி நேரிட்டது'; என்று எனக்குச் சொன்னுர்; சாக்கிய நாயனுருடைய வரலாறு என்ன சொல்லும உபாத்திடாடரே என்று நான்கேட்க, அவர், "அந்த வரலாறறை உங்கள் மகளிடங் கேட்டறிந்துகொள்ளுங்கள்; தமிழறிவிலே என்னைக்காட்டிலும் உங்கள் மகள் அதிகம்" என்ருர்.

## சிவநிந்தனையைக் கேட்டுக்கொண்டிருக்கலாமா?

'உபாத்தியார், இப்பொழுது இந்தப் பிள்ளையை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்" என்று நான் கேட்க, "ஆச்சி, வேறென்ன செய்வது, அவர்கள் என்ன சொன்னுலும் உங்கள் பிள்ளை அவர்கள் சொல்வதற்குக் காது கொடாமல் தன் கடமையைப் பார்த்துக்கொண்டு வர வேண்டியதுதான்" என்ருர் அந்த உபாத்தியாயர்; அதனைக் கேட்டிருந்த என்மகள், "ஐயா, வேறு எந்த நிந்தனையையுங் கேட்டுக்கொண்டிருந்தாலும் சிவநிந்தனையைக் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா? தக்கன் செய்த சிவநிந்தனையைக் கேட்டுக்கொண்டு, சிவனைப் புறக்கணித்து அவன் செய்த யாகத்தில் அவிப்பாகமுண்ட தோஷத்தினுலல்லவோ அரி பிரமேந்திராதி முப்பத்து முக்கோடி தேவர்கள் பலயுககாலமாகச் சூரபன்மன் முதலிய அசுரர்களால் தண்டிக்கப்பட்டார்களென்று எங்கள் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆனதால், ஐயா, குறை பெண்ணுதீர்கள், இன்று தொடக்கம் ஒருமாசத்தவணையில் என் உத்தியோகத்தை விடுகிறேன்" என்று உடனே எழுதிக்கொடுக்க, உபாத்தியாயர் கவலையோடு அப்பத்திரத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டார்; அப்படியே பின்னரும் ஒருமாசகாலம் படிப்பித்துவிட்டு என் மகள் இப்பொழுது சும்மாவிருக்கிருள் சாமி, நீங்கள் எங்கள் குலகுரு, உங்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லி எங்கேனும் ஒரு தக்க பள்ளிக்கூடத்தில் இப்பிள்ளையை ஒரு உபாத்தியாயராக நியமிக்கச்செய்யலாமோ என்பதைச் சொல்வதற்காகத்தான் உங்களைக் காண விரும்பினேம்" என்று சிவகாமி புரோகிதருக்குச் சொல்லி முடித்தாள்.

## "முயற்சி செய்தால் வாய்க்கும்"

இவைகளை யெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த புரோகிதர் சிந்தனையோடு சிவகாமியைப் பார்த்து 'சிவகாமியம்மே, நீர் சொல்வது நியாயமானது; உங்கள் பிள்ளை போய்ச் சேர்ந்து படிப்பிக்கக்கூடிய சைவப்பள்ளிக்கூடம் இப்போதைக்கு எமக்கு ஏதும் புலப்படவில்லை; எங்கேனும் உபாத்தியாயர் தேவையென அறிந்தால் உடனே வந்து உங்களுக்குத் தெரிவிப்போம்; ஆனுல், எமக்கு இதைவிட இன்னுமொரு நோக்கம் புலப்படுகிறது; அது உங்களுக்குச் சம்மதமாயிருக்குமோ அல்லாமலிருக்குமோ என்பதை யிட்டுத்தான் யோசிக்கிறேம்" எனலும், 'சாமி, விஷயத்தை வெளியிட்டுச் சொன்னுலல்லவோ நாங்கள் அறிந்து எங்கள் சம்மதம் சம்மதயீனங்களை உங்களுக்குச் சொல்லமுடியும்' என்று சிவகாமியம்மை வினவ, புரோகிதர் "வேறொன்றுமல்ல தகுந்த உத்தியோகம் செல்வம் செல்வாக்கு, உங்களோடு ஒத்தமரபு ஒரேமார்க்கம் ஒழுக்கமென்னு மிவைகளோடுகூடிய ஒரு மாப்பிள்ளையை மணம்பேசி உங்கள் மகளுக்கு ஒழுங்கு செய்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களோ" என்று சொல்லி முடிவதற்கிடையில் தாயின் பக்கலில் நின்ற பாக்கியலட்சுமி மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவி வீட்டுட் போய்விட்டாள். "அப்படி யெங்கேனும் வசதியாகவுண்டோ சாமி" என்று சிவகாமியம்மை வினவ, புரோகிதர் முயற்சிசெய்தால் வாய்க்குமென எண்ணுகிறேம்" என்ருர், அப்பொழுது சிவகாமியம்மை, "சுவாமீ, நாங்கள் இந்த நேரத்திலே கெட்டுப்போந் திருந்தாலும் எங்கள் குலம் கோத்திரம் மரபு சமயக் கொள்கை யெல்லாம் நீங்கள் அறிந்தவை, எங்கள் சந்ததியில் மற்சமாமிசமுண்போரில்லை; நாங்கள் பிறவிச் சைவர்கள், இவைகளை யெல்லாம் யோசியுங்கள்; இந்தக்காலத்திலே குடிவெறி பழகாத மாப்பிள்ளையைத் தேடுவது அருமையென்று அயலட்டத்திலே பேசக் கேட்டுள்ளோம்; உத்தியோகம் முதுசொம் அதிகாரம் முதலியவையெல்லா மிருந்தும் நல்ல ஒழுக்கமும் தெய்வபத்தியும் மரியாதையோடு கூடிய நடையுமில்லாத மாப்பிள்ளையினுல் என்னசுகம் சாமீ; இவளும் படித்தபெண், இவைகளை யெல்லாம் யோசித்து எங்கேனும் இப்படியான குணம் நடையுள்ள ஒரு மாப்பிள்ளை சந்திக்குமானுல் முயற்சி செய்யுங்கள் சாமீ" என்று பணிவுடன் சொன்னுள்;

## "குலத்திலும் ஒழுக்கம் மேலானது"

புரோகிதர் "சிவகாமியம்மேஉங்கள் குலம்கோத்திரம் மரபுஒழுக்கம் முதலியவைகளையெல்லாம், உங்கள் பரம்பரைப்புரோகிதர்களென்றமுறையில் எமதுமுன்னேரும்நாமும்நன்கு அறிந்துள்ளோம்; நீங்கள் விரும்புகிறகுணம் நடை யொழுக்கம் முதலியனவுள்ள ஒருவர் தமக்குச் சீதனத்தையிட்டுக் காரியமில்லை, குலமொழுக்கம் கல்வியறிவு செய்காரியம் முதலியவைகள் பூண்ட ஒரு கன்னிகை வேண்டுமென எம்மிடஞ் சொன்னுர்; நீங்கள் விரும்பும் குணம் நடை முதலியனவெல்லா முடையவர்; உங்களோடு [illegible] எமக்கு [illegible] ரும் மரபில் அதிகம் குறைந்தவரல்லர்; அவர் மலாய்நாட்டிலே உத்தியோகம் பார்த்து மதிப்போடு அதிக பொருளீட்டிக் கொண்டுவந்து இப்பொழுது இந்தவூரிலேதான் வாழ்கின்ருர்; அவர் இருக்கும்வீடே மாளிகையொன்ற மேன்மாடவீடாகும்; அதனைச்சூழ்ந்து பெரிய வளவுமுண்டு, இன்னும் காணிகள் வயல்புலம் முதலியவைக ளெல்லாம் அவரிடத்திலுண்டு; அவரையண்டிப் பிழைப்பவர் பலர்; இந்தச் சம்பந்தம் உங்களுக்கு ஏற்றதாயிருக்குமென நினைக்கிறேம்" என்ருர்; "சாமி, நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளுகிறேம்; மரபைப்பற்றிக் காரியமில்லை, குலத்திலும் ஒழுக்கம் மேலானதென்று தங்கைச்சியின் தகப்பனுர் அந்த நாளில் இடையிடையே சொல்வதுண்டு: ஆனுல் முதலொரு தாரமிழந்தவரென்கிறீர்கள்: அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்; அவருக்கு வயசு என்ன இருக்கும்" என்று சிவகாமி கேட்க ஐயா 'முப்பத்தைந்து வயசுவரையில் மதிக்கலாம்; ஆண்பிள்ளை விஷயத்தில் அது அதிக வயசல்ல; நீங்கள் பொருத்தம் பார்த்துப் பொருந்தினுலே செய்யலாம்; பொருத்த மில்லாவிட்டால் நாமே அந்தவிவாகத்தை நிறைவேற விடமாட்டோம்" என்ருர்; "ஏதோ, சாமி, உங்களுக்குத் திருப்தியென்ருல் நீங்கள் பேசிப் பார்க்கலாமே" என்ருள் சிவகாமி; புரோகிதர் சிவகாமியிடமும் மகளிடமும் விடை பெற்றுக்கொண்டு, தாம் மீண்டு சில [illegible] அங்கு வருவதாகக் [illegible]ச் சொல்லிவிட்டுப் போயினர். (வரும்)

---

பண்டிதர்

## ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

# அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன:-

திருவாளர்கள்:

| | ரூ. | ச |
|---|---|---|
| முன்கணக்குப்படி | 1093 | 50 |
| V. நடேசபிள்ளை புலோலி மேற்கு | 5 | 00 |
| M. பொன்னம்பலம், O. A. யாழ்ப்பாணம் கச்சேரி | 10 | 00 |
| A நடராசா, S. M. Malayan Railway மலேயா | 10 | 00 |
| T. கந்தையா D. P. R கோலாலம்பூர் | 15 | 00 |
| V. T. S. சிவகுருநாதன், லக்ஷ்மிவாசம் பருத்தித்துறை | 15 | 00 |
| ஆக | 1148 | 50 |

மேற்படி பண்டிதரவர்களின் மாணுக்கர்கள் அபிமானிகளா யுள்ளாரனைவரும் இந் நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணம் உதவுக. மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம் பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனுதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

☞ இவ்விழாவை அடுத்துவருஞ் சித்திரை மாசத்தில் நடத்த உத்தேசித்திருக்கிறேமென்பதை அபிமானிகள் அறிக.

கா. கந்தையா, தலைவர், க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி, அ. கனகசபாபதி, தனுதிகாரி,
ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை. வண்ணர்பண்ணை.

---

## சர்வசித்து வருட திருக்கணித பஞ்சாங்கம்

குறித்த வருடத்திற்குரிய திருக்கணித பஞ்சாங்கம், யாழ்ப்பாணம் மட்டுவில் பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயரவர்களால் திட்பநுட்பம் வாய்ப்பக் கணித்துத் தமது சோதிடரத்னுகர யந்திரசாலையில் தெளிவுற அச்சிட்டு, அழகுறக் கட்டி வெளியிடப் பெற்றிருக்கின்றது. பிரதியொன்றன் விலை $1\frac{1}{2}$ ரூபா. பிரபல புத்தகசாலைகளிலும்கடைகளிலும் பிரதிகள்பெறற்பாலன. எமக்குதவிய பிரதியின் பொருட்டு நன்றி கூறுகிறேம்.

---

இவ்வாரம் முடிவதற்கிடையில், 7500 தொன் அரிசி பர்மாவிலிருந்து கொழும்பில் இறக்குமதியாகு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* *

கிரேக்க அரசரான ஜோர்ஜ் அரசர் சென்ற செவ்வாய்க்கிழமை இறந்துவிட்டார், அவருடைய சகோதரர் போல் என்பவர் கிரேக்க அரசாங்க முடி புனைந்துள்ளார்.

---

குருநாகல் சைவமகாசபை

## திருவள்ளுவர் திருநாள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சைவமகாசபை மண்டபத்தில் மேற்படி கூட்டம் வித்தியாதரிசி திரு. அ. வி. மயில்வாகனம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. அத்தருணம் "இன்றைய உலகம் வள்ளுவரிடம் கேட்கும் புத்திகள்" என்ற விடயமாக ஆசிரியர் செ. செல்வத்துறை அவர்களும் 'வள்ளுவரும் குறளும்" என்ற விடயமாக பண்டிதர் வே. கந்தையா அவர்களும் பேசினுர்கள். பின்னர் 'வள்ளுவர் வீட்டில்" என்ற விடயமாகத் தலைவர் பேசி, ஆதிகால வள்ளுவரின் இல்லத்தைப்பற்றிப் பேசினுர். ஈற்றில் காரியதரிசியினுல் சபையோர்க்கு நன்றிகூறப்பட்டது.

கடித

---

## வேலணைத் தமிழ்க் கழகம்

விய ஸ்ரீ பங்குனிமீ 23உ (5-4-47) சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் தமிழ்க்கழக ஆக்கக்கூட்டம் ஒன்று நிகழும் என்று அறிவிக்கப்படுகிறது.

---

## புதுவருட வாழ்த்துப் பத்திரங்கள்

இவை 'யாழ்ப்பாணன்' புனைந்துள்ள மங்களகரமான இரு கவிதைகள் கொண்டு மிளிரும் இரண்டு இனங்கள். ஒன்றன்விலை 25 சதம். 5 பத்திரங்களுக்கு விலை ரூபா 1-00. 100 பத்திரங்களுக்கு விலை ரூபா 5.00 வேண்டுவோர் முற்பணமனுப்புக. தபாற்செலவு இனும். பிரபல புத்தகசாலைகளிலும் நியூஸ் ஏஜண்டுகளிடமும் பெறலாகும் மாதிரிப் பத்திரம் வேண்டுவோர் 25 சதத்துக்கு முத்திரைகள் அனுப்புக.

விலாசம்

1 லங்கா புத்தகசாலை பருத்தித்துறை
2 S. S. சண்முகநாதன் & சன்ஸ்
யாழ்ப்பாணம்.

Mis 1 4, 8, 11-4-47

---

## தேகவியோகம்

சி. சண்முகம்

சைவவேளாண்குலத்துதித் தவரும், நல்லூர் நாயன்மார்கட்டைச் சேர்ந்தவரும், பல வருடங்களாக யாழ்ப்பாணம் P. W. D. பகுதியிற் கடமையாற்றியவரும், பல புண்ணிய காரியங்களிற் பங்குபற்றியவருமாகிய திரு. சின்னத்தம்பி சண்முகம் அவர்கள் தம்மைப் பீடித்த நோய்காரணமாக சென்ற 27-3-47 வியாழக்கிழமை மாலை 3 மணியவில் தேகவியோகமாயினர். இவர் இறக்கும்போது வயது 75. ஈமக்கிரியைகள் இவரது மகன் பொன்னையாவால் செம்மணி மயானத்தில்நடைபெற்றன. இவரைப் பிரிந்து வருந்தும் மக்கள்சுற்றமித்திரர் ஆதியோருடன்எமது அநுதாபம்உரித்தாகுக. இவரது ஆன்மா சாந்தியடைக.

—கடித

## தானவரவு

மேற்படியாரின் கிரியைப்போது அவரது மகன் திரு. பொன்னையாவால் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்கு வரித்தனுப்பிய ரூபா 2 பெற்ரும்.

மனேஜர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசாதனம்
## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்,

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

## ஸ்ரீ சத்தியோசாத சிவாசாரியர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

இக்கொள்கையைச் சிலர் அநுசரிக்கத் தொடங்கினார்களேயன்றி, இவருக்குமுன் எவராவது சௌரமானப்படி இவ்விரதங்களை அநுட்டித்ததாகத் தெரியவில்லை. இவர் பாடிவைத்த போலிச் சுலோகங்களின்படி அநுட்டிப்பின் சிவாகமவிரோதமும் அநுட்டான விருத்தமுமாகும்.

பச்சாம்பேட்டைச் சிவாசாரியர் இவ்வளவில் நின்றாரல்லர். புத்தூர்ச் சிவாசாரியரென்றும் திருவானைக்காச் சிவாசாரியரென்றும் சொல்லப்படுமிவர் சிவப் பிரதிஷ்டாகாரிகை என்னும் அகோர சிவாசாரிய பத்ததி, சிவார்ச்சனா தீபிகை முதலிய நூல்களை வெளிப்படுத்தினார். இவர் நூல்களைத் தருவித்துப் படித்தவர்களிற் சிலர் அவற்றிற் சொல்லப்பட்டவையெல்லாம் சிறந்த விஷயங்களென்றும் லோகோபகார மென்றும் போற்றினார்கள், இவ்வூரிலும் இந்தியாவிலுமுள்ள ஆகம வித்துவான்கள், இவருடைய வெளியீடுகள் விபரீதமானவையென்றும், சுலோகங்கள் வழுக்கள் மலிந்தவையென்றும், சாஸ்திர விரோதமான கருத்துக்கள் நிறைந்தவையென்றும் உலகத்துக்குப் பயன்படாதவை யென்றுங் கண்டித்தார்கள், மேலும் பூர்வாசாரியராகிய அகோர சிவாசாரியரின் பெயரால் தாம் எழுதிய பிரதிஷ்டாகாரிகைக்கு அகோர சிவாசாரியர் பத்ததி என்று பெயர் சூட்டிவிட்டது, உலகைஏமாற்றுவதற்காகவேயென்று கவலையுங் கொண்டார்கள். மயிலை அழகப்ப முதலியாரால் அச்சிடப்பட்டனவே அகோர சிவாசாரியர் பத்ததியென்பது அறிஞர் அங்கீகாரம்.

இச்சிவாசாரியர் ஒருமுறை நேமத்துச் சிவாலய கும்பாபிஷேகத்துக்குப் போனார். அங்கே யாகசாலை அமைப்பு முதலியவைகள் சாஸ்திர விரோதமாயுள்ளனவென்று ஊமத்தானூடு வைத்தியநாதக் குருக்கள் ஆக்ஷேபனை செய்தார். அவற்றைப்பற்றிய விசாரணை காரைக்கால் சுவாமிநாதக் குருக்கள் மத்தியஸ்தராயிருப்ப நடைபெற்றது. பச்சாம்பேட்டைச் சிவாசாரியர், அவற்றிற்கு அசிதாகமத்திலே பிரமாணமிருப்பதாக உரத்துப் பேசினார். எசமானர்கள் அவரோடு சேர்ந்துகொண்டார்கள். ஸ்தலத்துக் குருக்கள்மாருடைய அநுசரணையோடு சிவாசாரியர் விஷயத்தை முடித்துக்கொண்டார்.

பின்பு கோவிலூர்க் கும்பாபிஷேகம் நடைபெறவிருந்தது. நேமம் கும்பாபிஷேக விஷயமான ஆக்ஷேபணைகளை வாதித்துத் தீர்மானத்துக்கு வருமாறு இக் கும்பாபிஷேகத்துக்கு முன்னதாகவே மடாதிபதிகள் ஓர் சபை ஏற்படுத்திச் சில மத்தியஸ்தர்களையும் நியமித்தார்கள்.

பச்சாம்பேட்டைச் சிவாசாரியர், ஊமத்தனூடு வைத்தியநாதக் குருக்கள் கூறும் ஆகம வாக்கியங்கள் சாங்கமாயில்லையென்றும், தமது பக்ஷத்

## விலைக்கட்டுப்பாடு

அரிசி, மா, துணிவகைகள் முதலியவற்றை ஒழிந்த ஏனைய பொருள்கள் மீதிருக்கும் விலைக்கட்டுப்பாடு, மார்ச்மாதத்துடன் தவிர்க்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது நிலைமை சீர்திருந்தாதபடியினால் விலைக்கட்டுப்பாடு இன்னும் 6 மாத காலத்துக்கு இருக்கவேண்டும் என்று கைத்தொழில் நிருவாகசபை தீர்மானித்திருக்கிறது.

## கத்தோலிக்கராகின்றனர்

தென்னிந்திய சேலம் ஜில்லாவில் உள்ள கிராமமக்கள் அனைவரும் தம் பழைய மதத்தைவிட்டுக் கத்தோலிக்கராகின்றனர் என்று கத்தோலிக்கரின் மதகுருவரான பாப்பாண்டவரின் வத்திக்கான்ரேடியோ கூறுகிறது.

6 மாத காலத்திற்கிடையில் மாத்திரம் 6 கிராமங்களில் உள்ளவர்கள் அப்படியே கத்தோலிக்க மதத்திற் சேர்ந்துவிட்டனர் என்றும், இன்னும் இரண்டு கிராமமக்கள் கூடிய சீக்கிரம் கத்தோலிக்கராகச் சேர்க்கப்பட விருக்கின்றனர் என்றும், இன்னும் 8 கிராமங்களில் உள்ளவர்களுக்குச் சுவிசேஷ போதனை கொடுக்கப்படுகிற தென்றும் மேற்படி ரேடியோ கூறுகிறது,

திற்கு அசிதாகமம் படலசாங்கமாயிருக்கிறதென்றும், தமது அசிதமே சிலாக்கியமென்றுஞ் சாதித்தார்.

மதுரை ஸ்ரீ பரமேசுரப்பட்டரவர்கள் சிவாசாரியரோடு வாதித்து, அவர் சொல்வது சாஸ்திர விரோதமென்றும், அவர் காட்டும் ஆகம சுலோகங்கள் கற்பனை யென்றும் ஏனைச் சிவாசாரியர்களிடத்தேனும் தேசிகர்களிடத்தேனும், மடங்களிலேனுமில்லாத விஷயங்களைக் கொண்டது சிவாசாரியருடைய அசிதமென்றும், சிவாசாரியர் செய்த பிரதிஷ்டாகாரிகை ஆபாசபூரிதமானதென்றும் அதனை அகோர சிவாசாரிய பத்ததியென்று வெளிப்படுத்தியது மோசமென்றும் அதன்படி நடக்கின் நாடு கெடுமென்றும் ஸ்தாபனஞ் செய்தார்கள். சிவாசாரியர் புத்தகத்தைப்பெற்றுக்கொண்டு நழுவிவிட்டார். பட்டரவர்களுக்கு மடாதிபதிகள் சன்மானஞ் செய்தார்கள். (வரும்)

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானல்
**இந்துசாதனத்தில்**
விளம்பரஞ் செய்யுங்கள்

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கினேஸ் வங்கி

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

(Mis 137 2-8—31-7-47)

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to, 1—4—48

## தந்தரோகசஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைததுக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், மூரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.
வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1.11-46—30-4-47 (வெ)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, April, 4, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org